முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1631

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**17.03.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார ஞான சொரூபமே
ஓங்கார ஞான பிரம்மமே
ஓங்காரன் சுப்ரமணியர் யானும்
ஓதிடுவேன் ஓங்காரக் குடிலாசான் அரங்கனுக்கு
2. அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 04 ம் நாள், 17.03.2024, ஞாயிற்றுக்கிழமை)
அருளுவேன் அரங்கன் சக்திபலம் கூட
வரங்களாக ஆறுமுகன் யானும்
வல்லமைகொண்டு நித்தம் நித்தம் ஆற்றல் கூட்டி
3. கூட்டியே அரங்கனுக்கு சூட்சும வரங்கள்
அனுதினமும் வழங்கி வருதல் காண
மாற்றம் கொள்ள கலியுக மக்களெல்லாம்
மாதவசி அரங்கனை நாடி வந்தால் போதும்
4. ஆற்றல்கூடி அவர்களும் ஞானவான்களாக
அகிலத்தை மாற்றுகின்ற மகா சக்திகளாக
ஆகவே தேற்றம் கண்டு இனிதே
அரங்கன் வழி கலியுக மக்களெல்லாம்
5. வரங்கள் கூடி ஞானிகளாக
வருங்காலம் ஞான யுகமாற்றம் புரிகின்ற
புரிகின்ற மகான்களாக புண்ணியவான்களாக
பேருலகில் சர்வ ஆற்றலும் பெருகிப் பெருகியே
6. அரங்கன் வழி வரும் மக்களெல்லாம்
பிசகின்றி இனி பிறவாப்பேறு
நேசமுடன் யுக மாற்றம்
நிகழ்த்துகின்ற உயர் சக்திகளாக மாறி

7. அற்புதத்தை அரங்கன் வழி நடத்தி
ஆக்கமுடன் இந்த உலகத்தில்
ஞான ஆட்சி பலம் தருவர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–